**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்குஎண் | 513/2017 |
| நாள் | 23.10.2024 |
| வா.சா. 2 | தமிழரசன், த/பெ. கருப்புசாமி |
| வயது | 47 |
| ஊர் | புகளூர் தாலுக்கா |

சாட்சி இந்நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

நான் ஷேர் மார்க்கெட் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வாதி ஆனந்தன் என்னை நீதிமன்றத்திற்கு வரும்படி அழைத்தார். இவ்வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தை வாதி தான் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வைத்து தான் பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். பிரதிவாதியின் முழுபெயர் சுப்பிரமணி ஆகும். பிரதிவாதி லாரி வைத்துள்ளார். அதனால் மண், மணல் வாங்கும் போது பிரதிவாதியை எனக்கு தெரியும். பிரதிவாதியை கடந்த 10 ஆண்டுகளாக எனக்கு தெரியும். பிரதிவாதியின் சொந்த ஊர் வேடிச்சிபாளையம் ஆகும். நான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றதில்லை. பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் திருமணத்திற்கு செல்லவில்லை. பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மனைவியின் பெயர் எனக்கு தெரியாது. தற்போது பிரதிவாதியை எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவருடன் எனக்கு கடந்த 7 ஆண்டுகளாக தொடர்பு

இல்லை. பிரதிவாதியின் தொலைபேசி எண் எனக்கு தெரியாது. கடந்த 08.11.2015–ம் தேதியன்று பிரதிவாதி வாதியிடம் கடன் பெற போவதாக கூறி என்னை தொலைபேசியில் அழைத்தார். பிரதிவாதி என்னை பரமத்திக்கு காலை 9.00 மணிக்கு வரும்படி கூறினார். நான் சென்றேன். நானும் பிரதிவாதியும் இருசக்கர வாகனத்தில் வாதியின் வீட்டிற்கு சென்றோம். அந்த வாகனம் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி அந்த இருசக்கர வாகனத்தை கொண்டு வந்தார் நான் அதில் சென்றேன். அது அந்தபெயர் கொண்ட இருசக்கர வாகனம் என்று எனக்கு தெரியாது. வாதி ஆனந்தன் குடியிருந்து வரும் இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் 22 கிமீ. ஆகும். காலை 9.45 மணிக்கு வாதியின் வீட்டிற்கும் சென்றடைந்தோம். நாங்கள் வாதியின் வீட்டிற்கு சென்றபோது கடனுறுதிச் சீட்டு எழுதி கொடுத்த பின்பு தான் வாதி பிரதிவாதிக்கு தொகையை கடனாக கொடுத்தார். பிரதிவாதிக்கு வாதி ரூ. 500/– நோட்டுகளாக தான் கடன் தொகையை வழங்கினார். பிரதிவாதி எதற்காக கடன் பெற்றார் என்ற காரணத்தை கடனுறுதிச் சீட்டில் எழுதினேன். பிரதிவாதி தொழிலுக்காக கடன் பெறுவதாக கூறியதை நான் எழுதினேன். பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே எவ்வித அறிமுகமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டிய நபர் என்றும் அதனால் தான் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அ ளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 08.11.2015–ம் தேதியன்று வாதி வீட்டில் வைத்து பிரதிவாதி தாவா கடன் தொகையை பெறவில்லை என்றும், பிரதிவாதியின் தாவா கடனுறுதிச் சீட்டை வாதிக்கு மறுபயனுக்காக ஏற்படுததி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

வா.தசா.ஆ 1. கடனுறுதிச் சீட்டிலுள்ள கையொப்பம் பிரதிவாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என் தரப்பு சாட்சியம் சட்டபடி ஏற்றுகொள்வதற்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.

ஒம். திரு. வேடியப்பன்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.